செய்தி வெளியீடு எண்: 661 நாள். 06.10.2017

## செய்திக்குறிப்பு

06.10.2017 அன்று பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழ்நாடு முழுவதும் கொண்டாடி வரும் வேளையில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாநிலம் முழுவதும் பள்ளி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் சென்னை மாவட்ட அளவில் பள்ளி பயிலும் மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 06.10.2017 ஆம் நாளன்று சென்னை, எழும்பூர், மாநில மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடத்தப்பெற்றன. இப்போட்டிகளில் சென்னையில் உள்ள பல்வேறு அரசு, தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு முதல், இரண்டு, மூன்றாம் பரிசுகளை வென்ற மாணவச் செல்வங்களுக்கு பிற்பகலில் நடைபெற்ற நிறைவு விழாவில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கி சிறப்புரையாற்றினார்.

சிறப்பு விருந்தினர்களாக கவிக்குயில் மாதஇதழ் நிறுவனர்/ஆசிரியர் முனைவர் ஆனைவாரி ஆனந்தன் அவர்கள், மொழிப்போர் மறவர் விடுதலைப் போராட்ட வீரர் புலவர் கி.த.பச்சையப்பன் அவர்கள் மற்றும் மரு.பாக்கம் தமிழன் அவர்களும் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

**வெற்றி பெற்ற மாணாக்கர்களின் விவரம் :**

**கவிதைப்போட்டி**

| | |
|---|---|
| முதல் பரிசு | எஸ். நந்தவேல்,<br>12ஆம் வகுப்பு,<br>பதிப்பகச் செம்மல் க.கணபதி அரசு மேல்நிலைப் பள்ளி,<br>கோடம்பாக்கம், சென்னை – 24 |
| இரண்டாம் பரிசு | சு. சுவேதா,<br>11ஆம் வகுப்பு,<br>லூர்து மகளிர் மேல்நிலைப் பள்ளி,<br>பெரம்பூர், சென்னை – 600 011 |
| மூன்றாம் பரிசு | பி.நிமிலிஸ்வரி,<br>12 ஆம் வகுப்பு<br>தி மெட்ராஸ் சேவாசதன் மேல்நிலைப் பள்ளி,<br>சேத்துப்பட்டு, சென்னை – 600 031. |

## கட்டுரைப் போட்டி

| | |
|---|---|
| முதல் பரிசு | நீ. ரம்யா,<br>12ஆம் வகுப்பு,<br>செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளி,<br>கோவளம், சென்னை. |
| இரண்டாம் பரிசு | ஆ. யுவராணி,<br>11ஆம் வகுப்பு,<br>புனித இரபேல் பெண்கள் மேல்நிலைப் பள்ளி,<br>சாந்தோம், சென்னை – 600 004. |
| மூன்றாம் பரிசு | வி. கெட்சிஜெபஷாலோம்,<br>11ஆம் வகுப்பு,<br>வித்யோதயா பெண்கள் மேல்நிலைப் பள்ளி,<br>தி.நகர், சென்னை – 600 017. |

## பேச்சுப் போட்டி

| | |
|---|---|
| முதல் பரிசு | வே. பாக்யா,<br>12 ஆம் வகுப்பு,<br>ஸ்ரீ ஆர் கே எம் சாரதா வித்யாலயா மாதிரி மேல்நிலைப் பள்ளி,<br>தி. நகர், சென்னை – 600 017. |
| இரண்டாம் பரிசு | ச. பிரவின் குமார்,<br>11ஆம் வகுப்பு,<br>இராமகிருஷ்ணா மிஷன் மேல்நிலைப் பள்ளி,<br>தி.நகர், சென்னை – 600 017. |
| மூன்றாம் பரிசு | பா.கமலேஷ்லால்,<br>12 ஆம் வகுப்பு,<br>ஊ.பு.அ. சௌந்திரபாண்டியன் மேல்நிலைப் பள்ளி,<br>அயன்புரம், சென்னை – 600 023. |

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை
தலைமைச் செயலகம், சென்னை – 9